# "நாங்கள் மனுஷருக்குப் புத்தி சொல்லுகிறோம்"

*பவுல், 2 கொரி. 5:11ல் "ஆகையால் கர்த்தருக்குப் பயப்படத் தக்கதென்று அறிந்து, மனுஷருக்குப் புத்தி சொல்லுகிறோம்" என்று கூறினார். இந்தச் சுருக்கமான கூற்றில் மதிப்புமிக்க பல பாடங்கள் அடங்கியிருப்பதால் இதை நாம் கவனமாய் ஆராய்ந்து பார்ப்போம்.*

## *"நாங்கள் மனுஷருக்குப் புத்தி சொல்லுகிறோம்"*

*சுவிசேஷத்தின் பொக்கிஷமானது மண்பாண்டங்களில் உள்ளது (2 கொரி. 4:7). உலகத்திற்குச் சுவிசேஷத்தைக் கூறும் சிறப்புரிமையானது தூதர்களுக்குத் தரப்படவில்லை. அந்த மதிப்பு - மற்றும் பொறுப்பு - மனிதர்களுக்கே தரப்பட்டது.*

*வசனத்தைப் பிரசங்கிப்பதன் மூலமாக மனிதர்கள் இரட்சிக்கப்படுகின்றார்கள் (1 கொரி. 1:21). இந்தக் கருத்தின் வகையில், மனிதர்கள் மற்ற மனிதர்களை இரட்சிக்கின்றனர் (யாக். 5:20). புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் இரட்சிக்கின்ற சங்கிலியில் மனிதக் கருவிப் பயன்பாட்டை ஒரு வலிவு மிக்க ஒரு வளையமாகவே கருதினார்கள்.*

*பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுதல் என்ற உபதேசத்தை மனிதர்கள் சில வேளைகளில் மறுக்கின்றனர், ஏனெனில் அது இரட்சிப்புக்கான ஒரு மனிதர் என்ற மூன்றாம் நபரை ஒரு பகுதி சார்ந்திருக்கும்படி செய்கின்றது. விசுவாசத்தைப் பற்றிய உபதேசமும் இவ்வாறே உள்ளது, ஏனெனில் அது எவ்வகையிலாவது ஒவ்வொரு நபருக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டியதாக அல்லது போதிக்கப்பட வேண்டியதாக உள்ளது. (ரோமர் 10:13, 14ஐக் காணவும்). ஆகையால் இந்த மறுப்பானது விசுவாசத்தையும் ஞானஸ்நானத்தையும் விலக்கிப் போடுவதாக இருக்கும்.*

## “நாங்கள் மனுஷருக்குப் புத்தி சொல்லுகிறோம்”

*நாம் மனிதர்களைக் கிறிஸ்தவர்களாகும்படிக் கட்டாயப் படுத்துவதில்லை. நாம் அவர்களை பயமுறுத்துவதில்லை. மாறாக, நாம் அவர்களுக்குப் புத்தி சொல்லுகிறோம். தேவன் இயற்பொருளான இந்த அகிலத்தை வலிமையினால் ஆளுகின்றார், ஆனால் அவர் மனிதர்களை அதே வழிமுறையில் ஆளுவதில்லை. மாறாக, அவர் மனிதர்களின் இருதயக் கதவண்டையில் நின்று அதைத் தட்டுகின்றார், அதற்குள் (மனிதருடைய இருதயத்திற்குள்) பிரவேசிக்க அழைப்பை அவர் விரும்புகின்றார் (வெளி. 3:20).*

*மக்களைக் கிறிஸ்துவினிடத்தில் கொண்டு வருவதற்குப் போதித்தல் மட்டுமே ஒரு வழிமுறையாக உள்ளது. போதனையி ல் அவர்களை வெற்றி கொள்ள முடியவில்லையென்றால், அவர்களை வெற்றி கொள்ள இயலாததாகின்றது. மனிதன் ஏற்றுக் கொள்ளும் திறன் உடையவனாய் இருக்கின்றான் என்ற கொள்கையின் அடிப்படையிலேயே தேவன் மனிதனிடம் செயல்படுகின்றார் என்பதை யோவான் 6:44, 45 காண்பிக் கின்றது. “என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; ... எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே; ஆகையால் பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக் கொள்ளுகிற எவனும் என்னிடத்தில் வருகிறான்.”*

## “நாங்கள் மனுஷருக்குப் புத்தி சொல்லுகிறோம்”

*தேவனுடைய தூண்டி இயக்கும் செய்தியானது கற்களையோ, பாறைகளையோ, கடல்களையோ அல்லது விண்ணின் நட்சத்திரங்களையோ நோக்கி வழிநடத்துவதில்லை, ஆனால் அது மனிதனை நோக்கி வழிநடத்துவதாய் இருக்கின்றது. பிரகாசிக்கும் நட்சத்திரங்கள் எல்லாவற்றின் மீதும் அவர் காட்டியுள்ள அக்கறையைவிட மனிதர்மேல் அவர் அதிக அக்கறை காட்டியிருக்கின்றார்.*

*இரட்சிப்பு என்பது தேவனுக்குப் புத்தி கூறும் விஷயம் அல்ல. “மதத்திற்குள்ளாக்கும்” புலம்புபவர்களின் இருக்கைப் பலகை அமைப்பைச் சேர்ந்தவர்கள் இரட்சிக்கும்படி தேவனிடம் வேண்டுகோள் விடுவிக் கின்றனர். நம்மை இரட்சிக்கும்படி நாம் தேவனுக்குப் புத்தி கூற வேண்டிய அவசியம் இல்லை; அவர் தயாராகவும், ஆவலாகவும் இருக்கின்றார். அவர் நம்மை அழைக்கின்றார். தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஆன பெரும் பிளவானது மனிதரால் ஏற்படுத்தப்பட்டது என்பதை நாம் நினைக்கக் கடவோம். தேவனல்ல, மனிதனே திரும்புதல் என்ற பணியைச் செய்ய வேண்டும். “தேவனோடே ஒப்புரவாகுங்கள்” (2 கொரி. 5:20); இது தேவன் மனிதரிடத்தில் ஒப்புரவாகும் விஷயம் அல்ல.*

*மனிதர்கள் எப்படியிருக்க வேண்டும் என்று பவுல் புத்தி சொன்னார்? அவரிடத்தில் ஒரு மனிதர், "நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங் குறைய நீ என்னை சம்மதிக்கப் பண்ணுகிறாய்" (அப். 26:28) என்று கூறினார். மனிதர்கள் எவ்வகையிலும்* "-ites" *அல்லது* "-ists" *ஆக இருக்கும்படி பவுல் புத்தி சொல்லவில்லை. சில நாமகரணக் கூட்டத்தில் சேர்ந்து கொள்ளும்படி அவர் மனிதர்களைப் புத்தி சொல்லவில்லை. அவர்களைக் கிறிஸ்தவர்களாகும்படி அவர் புத்தி சொன்னார். அவர் மனிதர்களைக் கிறிஸ்தவர்களாய் - கிறிஸ்தவர்களாய் மட்டும் - இருக்கும்படி புத்தி சொன்னார்.*

## *"கர்த்தருக்குப் பயப்படுதல்"*

*பவுல் தாம், "கர்த்தருக்குப் பயப்படத் தக்கதென்று" அறிந்திருந்ததால் மனிதர்களுக்குப் புத்தி சொல்வதாகக் கூறினார்* ("the terror of the Lord"; KJV). *இது மக்கள் சிலவேளைகளில் கவனிக்கத் தவறுகின்ற தேவனுடைய பண்பாக உள்ளது. தேவன் தயவுள்ளவராகவும் கண்டிப்புள்ளவராகவும் இருக்கின்றார் (ரோமர் 11:22). அவர் தம்மால் முடிந்த போதெல்லாம் இரக்கம் நிறைந்தவராகவும், அவசியமான வேளையில் கண்டிப்புள்ளவராகவும் இருக்கின்றார்.*

*தனிப்பட்ட முறையில் சொந்தமான ஒரு தேவனுக்கு எதிராகக் கலகம் செய்து, இயற்கையே தங்கள் தேவன் என்று கூறுகின்ற மக்களை நாம் கண்டிருக்கின்றோம். அவர்கள் சிலவேளைகளில் கண்டிப்பை வெளிப்படுத்துகின்ற தனிப்பட்ட முறையில் சொந்தமான ஒரு தேவன் என்ற கருத்தை விரும்புவதில்லை. இயல்பான உலகத்தின் மென்மையான பண்புகளோடும் கூட இயற்கையின் சக்திகள் பயங்கரமான பக்கமும் கொண்டிருப்பதை அவர்கள் நிதானித்து, நினைத்துப் பார்ப்பதில்லை.*

*தேவனுடைய தயவு மற்றும் கோபமும் ஆகிய இரண்டுமே பழைய ஏற்பாடு முழுவதிலும் காணப்படுகின்றது, ஏதேன் தோட்டமானது தேவனுடைய தயவைக் காட்சிப் படுத்துகின்றது, ஆனால் அந்தத் தோட்டத்திலிருந்து மனிதனை வெளியேற்றிய நிகழ்ச்சியானது தேவனுடைய கண்டிப்பைக் காட்சிப் படுத்துகின்றது. தேவன் பல ஆண்டுகளாக மனிதனிடத்தில் பொறுமையும் நீடிய தயவும் உள்ளவராய் இருந்தார், இருப்பினும் பழைய ஏற்பாட்டில் மனிதனுடைய வரலாறானது வெள்ளப் பெருக்கு, சோதோம் கொமோராவின் அழிவு, எகிப்திய சேனையின் அழிவு மற்றும் இது போன்ற பல நிகழ்ச்சிகளினால் இடையூறு உண்டாக்கப்பட்டுள்ளது.*

*"கர்த்தருக்குப் பயப்படத் தக்கதென்று" பவுல் குறிப்பிட்ட பொழுது பெரும்பாலும் அவர் (பவுல்) தமது சிந்தையில் நியாயத்தீர்ப்பு நாளில் வெளிப்படுத்தப்படும் கோபத்தைப் பற்றியும் எண்ணம் கொண்டிருந்திருக்கலாம். பவுல் இனி வரவிருக்கும் நியாயத்தீர்ப்பைப் பற்றி பேலிக்ஸிடம் பிரசங்கித்தார், பேலிக்ஸ் "பயமடைந்தார்" ( "நடுங்கினார்,"* KJV; *அப். 24:25). நாமும் கூடப் பயந்து நடுங்க வேண்டும்: "நம்முடைய*

*தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே" (எபி. 10:31). இருப்பினும் பேலிக்ஸ் செயல்படவில்லை. அவர் சுவிசேஷச் செய்திக்குப் பதில்செயல் செய்யவில்லை, ஆனால் தமக்குச் ''சமயமான போது'' பவுலை அழைப்பிப்பதாகக் கூறினார். அவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கு இன்னொரு வாய்ப்பை எப்பொழுதாவது கண்டாரா என்று நாம் அறியவில்லை.*

## *முடிவுரை*

*சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதற்கு "நேரத்தைக் காண" நீங்கள் காத்துக் கொண்டிருக்கின்றீர்களா? இன்னும் எவ்வளவு நேரம் உங்களுக்கு விடப்பட்டுள்ளது? "... இவ்வளவு பெரிதான இரட் சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம்?" (எபி. 2:4).*